# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 261/மா/2023**
**நாள்: 26.09.2023**

திருமதி. ஆர். மதுமித்ரா,
கோடம்பாக்கம், சென்னை – 600 024. – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம்–10, பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, கோடம்பாக்கம், காமராஜர் காலனி, 9வது தெரு, நெ.13/25 என்கிற முகவரியில் வசிக்கும் திருமதி. ஆர். மதுமித்ரா என்பவரின் 05.09.2023 நாளிட்ட மனு 07.09.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 261/மா/2023 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

பெருநகர சென்னை மாநகராட்சி, கோடம்பாக்கம், காமராஜர் காலனி, 9வது தெரு, நெ.13/25 என்கிற முகவரியில் வசிக்கும் திருமதி. ஆர். மதுமித்ரா என்பவரின் முறையீட்டு மனுவில் :-

"நான் மேற்கண்ட முகவரியில் வசிக்கிறேன். கடந்த 26.06.2023 அன்று பெருநகர சென்னை மாநகராட்சி எண்.117, மண்டலம்-10, என்.எஸ்.கே.சாலை, கோடம்பாக்கம், சென்னை – 600 024 என்கின்ற முகவரியில் உள்ள மண்டல அலுவலர் அவர்களிடத்தில் பதிவு தபால் வழியாக நான் புகார் மனு செய்தேன். எனது புகார் மனுவை பெற்றுக்கொண்டு, இன்றுடன் 69 நாட்கள் முடிவடைகின்றது. இதுவரை எனது புகார் மனு மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதை தங்கள் கவனத்திற்கு தெரிவித்துக் கொள்கிறேன். மாண்பமை நீதியரசர் அவர்களே இதுவரை எனது மனு சம்பந்தமாக என்னிடம் நேரில் விசாரணையோ அல்லது எனது தொலைபேசி எண்ணுக்கு அழைப்போ, குறுஞ்செய்தியோ, எனக்கு கடிதமோ அல்லது எனது மனுவை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை கடிதமோ எனது புகார் மனுக்கான வரிசை எண்ணோ எந்த சட்ட நடைமுறைகளையும் மற்றும் விதிமுறைகளையும் பின்பற்றவில்லை. எனவே இதனால் நான் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளேன். இவை அனைத்தும் அப்பட்டமான மனித உரிமை மீறலாகும். இதனால் எனக்கு ஏற்பட்ட மன வேதனைக்கு மற்றும் சட்டப்படி

கடமையை செய்ய தவறிய மண்டல அலுவலர் அவர்கள் மீது துறை சார்ந்த ஒழுங்கு நடவடிக்கை எடுத்திட வேண்டும் என்று பணிந்து கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் கடமையை செய்ய தவறிய சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது உரிய சட்ட விதிமுறைகளின்படி நடவடிக்கை எடுத்திட வேண்டும் என்று மீண்டும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். நான் புகார் அளித்த சாலை 600 மீட்டர் நீளம் கொண்ட பொதுப் பாதையாகும். இங்கு இந்த பாதையை இப்போது ஒற்றை வழி சாலையாக மற்றும் இதையே நிரந்தரமாகவும், தற்காலிகமாகவும் பயன்படுத்தக்கூடிய வகையில் மக்கள் அன்றாடம் பயன்படுத்தக்கூடிய பிரதான சாலையாகும். தினம், தினம் இங்கு 2 அல்லது 3-க்கு மேற்பட்ட விபத்துக்கள் நடைபெறுகின்றன. இங்கு குழந்தைகள் மற்றும் கர்ப்பிணிகள், மாற்று திறனாளிகள், முதியோர்கள், பள்ளி குழந்தைகள், வீடு திரும்புவதற்கு மிகவும் சிரமமாகவும் அச்சமாகவும் உள்ளது. வேகத்தடை இல்லாததால், அனைத்து வாகனங்களும் அதிகப்படியான வேகத்தில் வருகின்றன. இதனால் அங்கு உள்ள சாலை மற்றும் தெருக்களில் இருந்து வெளியே வரும்போது நடுக்கத்துடனே செல்லவேண்டியுள்ளது. இங்கு 3 அல்லது 4 வேகத்தடை அமைத்திட வேண்டும். முறையான வேகத்தடையின் மீது வண்ணங்கள் பூசி சிவப்புநிற ரிப்ளக்டர் பொருத்திட வேண்டும் என்பதே எனது புகார் மனு ஆகும். இங்கு வேதத்தடை உள்ளது என்று வாசகம் பொருத்திய பதாகை அமைத்து தந்திட வேண்டும் என கோரியுள்ளார்.

**இம்முறை மன்றத்தின் 12.9.2023 நாளிட்ட கடிதத்தின் மூலம் மேற்கண்ட மனு மீது பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் - 10ன் மண்டல அலுவலரிடம் விரிவான அறிக்கை கோரப்பட்டது. ஆனால் அறிக்கை ஏதும் பெறப்படவில்லை.**

**3) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை இம்முறைமன்ற நடுவ 12.9.2023 நாளிட்ட அழைப்பாணைகள் மூலம் 19.9.2023 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு அழைக்கப்பட்டனர்.**

**முறையீட்டு மனுதாரர் 19.9.2023 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார் :**

> "சென்னை கோடம்பாக்கம் பகுதியில் மெட்ரோ ரயில் பணிகள் நடைபெறுவதால், நாங்கள் வசிக்கும் காமராஜர் காலனி 9வது தெருவின் வழியாகத்தான் அனைத்து வாகனங்களும் செல்கின்றன. மேற்கண்ட தெருவில் ஒரு வேகத்தடை மட்டுமே உள்ளது. அதைக் கடந்து வேகமாக செல்லும் வாகனங்களால் எங்கள் தெருவில் செல்லும் பள்ளிக்குழந்தைகள் மிகவும் சிரமத்திற்குள்ளாகி வருகின்றனர். சில நேரங்களில் வாகனங்களின் அதிக வேகத்தினால் மேற்கண்ட தெருவில் விபத்துக்களும் ஏற்படுகின்றன. எனவே மேற்கண்ட தெருவில் வாகனங்களின் வேகத்தை குறைக்கும்பொருட்டு அத்தெருவில் வேகத்தடை அமைத்திட மாநகராட்சியில் புகார் மனு அளித்தும் மாநகராட்சியால் எவ்வித நடவடிக்கை எடுக்கப்படவில்லை.
>
> எனவே மேற்கண்ட காமராஜர் காலனி 9வது தெருவில் சென்னை மாநகராட்சியால் வேகத்தடைகள் அமைத்திட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

**பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம்-10ன் உதவிப் பொறியாளர் 19.09.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பின்வருமாறு பதிவு செய்துள்ளார் :**

"மனுதாரர் தெரிவித்துள்ள இடமான கோடம்பாக்கம் காமராஜர் காலனி 9வது தெருவின் நீளம் சுமார் 190 மீட்டராகும். அங்கு ஏற்கனவே ஒரு வேகத்தடை உள்ளது. அத்தெருவில் வாகனங்கள் அடிக்கடி கடந்து செல்வதால் அங்கு ஏற்கனவே போடப்பட்டுள்ள ஒரு வேகத்தடையுடன், மற்றொரு வேகத்தடை அமைத்திட போக்குவரத்து காவல் துறையின் அனுமதி பெற்று இன்னும் ஒரு மாத காலத்தில் மேற்கண்ட வேகத்தடை அமைக்கப்படும் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

**4) முறையீட்டு மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-10ன் உதவிப் பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் அறிய முடிகிறது.**

மனுதாரர் திருமதி. ஆர். மதுமித்ரா, சென்னை, கோடம்பாக்கம், காமராஜர் காலனி, 9வது தெருவில் வசிப்பதாகவும், அந்த சாலையில் வாகனங்கள் மிக வேகமாக செல்வதாகவும், அதனால் அச்சாலையை கடந்து செல்லும் பெரியவர்கள், சிறுவர்கள், கர்ப்பிணி பெண்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் அச்சத்துடன் செல்வதாகவும், எனவே, அங்கு வேகத்தடை அமைக்கக் கோரி, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-10 அலுவலகத்தில் மனு கொடுத்தும் நடவடிக்கை எடுக்கவில்லையென தெரிவித்து, தன் மனு மீது உரிய விசாரணை மேற்கொண்டு, மேற்கண்ட சாலையில் வேகத்தடை அமைத்திட உத்தரவிடுமாறு கோரியுள்ளார்.

5) மனுதாரர் குறிப்பிட்ட இடமான கோடம்பாக்கம் காமராஜர் காலனி 9வது தெருவின் நீளம் சுமார் 190 மீட்டர் எனவும், அங்கு ஏற்கனவே ஒரு வேகத்தடை உள்ளது என்றும், அச்சாலையில் வாகனங்கள் அடிக்கடி கடந்து செல்வதால், ஏற்கெனவே உள்ள வேகத்தடையுடன் மற்றொரு வேகத்தடை அமைத்திட போக்குவரத்து காவல்துறையின் அனுமதி பெற்று இன்னும் ஒரு மாதத்தில் வேகத்தடை அமைக்கப்படும் என்று பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் - 10ன் உதவிப் பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

6) மனுதாரர் மேற்கண்ட கோரிக்கை குறித்து 26.6.2023 அன்று புகார் மனு அளித்தும், இம்முறைமன்றம் மனுதாரரின் மனு மீது விசாரணைக்கு உத்திரவிட்ட நிலையில், அச்சாலையில் வேகத்தடை ஒரு மாதத்தில் அமைக்கப்படும் என்று பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் -10ன் அலுவலர் தெரிவித்து இருப்பது, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் - 10ன் அலுவலர்கள் பொது மக்களின் மனுக்களை அலட்சியமாகவும், மெத்தனப்போக்குடன் கையாளுகிறார்கள் என்பதை இம்முறைமன்றம் சுட்டிக்காட்ட விரும்புகிறது. இத்தகைய போக்கை இம்முறைமன்றம் வன்மையாக கண்டிக்கிறது.

7) பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் -10ன் உதவிப் பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு, சென்னை கோடம்பாக்கம் காமராஜர் காலனி 9வது தெருவில் போக்குவரத்து காவல்துறையின் அனுமதி பெற்று இன்னும் ஒரு மாதத்தில் வேகத்தடையை (Speed Breker) அமைத்திட உரிய அவசியமான, அவசரமான நடவடிக்கை எடுக்குமாறும், அவ்வாறு எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த அறிக்கையினை 45 தினங்களுக்குள்

இம்முறைமன்றத்திற்கு அனுப்பி வைக்குமாறும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-10-ன் மண்டல அலுவலருக்கு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

8) பெருநகர சென்னை மாநகராட்சியின் எல்லா மண்டலங்களிலும் இவ்வாறான அதிக போக்குவரத்து உள்ள பகுதிகளை கள ஆய்வாளர்களைக் கொண்டு ஆய்வு செய்து தேவைப்படும் அவசியமான இடங்களில் போக்குவரத்து காவல் துறையின் அனுமதி பெற்று வேகத்தடை அமைத்திட உரிய நடவடிக்கை எடுக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு அறிவுரை வழங்கி இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

2023-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 26-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திருமதி. ஆர். மதுமித்ரா,
   நெ. 13/25, 9வது தெரு, காமராஜர் காலனி,
   கோடம்பாக்கம், சென்னை – 600 024.
2. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையாளர்,
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
3. மண்டல அலுவலர்,
   மண்டலம்–10, சென்னை பெருநகர மாநகராட்சி,
   64, என்.எஸ்.கே. ரோடு, இராஜீவ்காந்தி நகர்,
   கோடம்பாக்கம், சென்னை – 600 0024.
4. கண்காணிப்பு பொறியாளர்,
   மழைநீர் வடிகால்துறை,
   ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

நகல் : மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்